# நமக்கு இரட்சிப்பு அவசியம்

# இயேசுகிறிஸ்து

## ஒருவரே நம்மை இரட்சிக்க வல்லவர்

''அவராலேயன்றி (இயேசுகிறிஸ்துவாலேயன்றி) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' அப்போஸ்தலர் 4:12.

**1. நமக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவை; ஏனெனில் நாம் பாவிகள்.**

''எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானோம்'' ரோமர் 3:23.

''ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை'' பிரசங்கி 7:20.

''பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே''
I இராஜாக்கள் 8:46.

''இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' சங்கீதம் 51:5.

**2. நமக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவை; ஏனெனில் நம்மை நாமே இரட்சிக்க முடியாது.**

''நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே,......... நம்மை இரட்சித்தார்'' தீத்து 3:5.

''......கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே'' கலாத்தியர் 2:16.

''மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரண வழிகள்''
நீதிமொழிகள் 14:12.

''நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது.... .. ஏசாயா 64:6.

**3. நமக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவை; ஏனெனில் நாம் அவரை விசுவாசிக்காவிட்டால் கெட்டுப்போவோம்.**

''குமாரனிடத்தில் (இயேசுகிறிஸ்துவினிடத்தில்) விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்.'' யோவான் 3:36.

“தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை (இயேசுகிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” யோவான் 3:16.

“நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லோரும் அப்படியேக் கெட்டுப்போவீர்கள்” லூக்கா 13:3.

## 4. ஆதலால் நாம் செய்யவேண்டியது:-

“கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.” அப். 16: 31.

“அவருடைய (இயேசுகிறிஸ்துவினுடைய) நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்” யோவான் 1:12.

“உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். அப். 3:20.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் (இயேசுகிறிஸ்து), உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்”. I யோவான் 1:9.

“அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் I யோவான் 1:7.

“கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். ரோமர் 10:9.

“இப்பொழுதே, அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்” 2 கொரிந்தியர் 6:2.

...இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்... உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள்.” எபிரேயர் 3:7,8.

“இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்?” எபிரேயர் 2:4.

**இக்கைப்பிரதியை வாசிக்கும் அன்பார்ந்த சகோதரனே, சகோதரியே இன்னும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வைப்பற்றி அறிய விரும்பினால் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.**

---

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India